**தமிழ் இணையக் கல்விக்கழகம்**

**சென்னை – 600 025.**

**இளநிலைத் தமிழியல் – பட்டம் (B.A. TAMILOLOGY – Degree)**

**இரண்டாம் ஆண்டு – மூன்றாம் பருவம்**

**நேரடி எழுத்துத் தேர்வு (OFF – LINE WRITTEN EXAMINATION)**

**நவம்பர், திசம்பர் – 2014**

**A011 காப்பிய இலக்கியம்**

**காலம் : 3 மணி நேரம்** **மதிப்பெண்கள் : 75**

**(குறிப்பு : பிரிவு – 1இல் இருந்து எல்லா வினாக்களுக்கும் விடை தர வேண்டும். விடை ஒன்றிற்கு ஒரு மதிப்பெண். பிரிவு – 2இல் இருந்து ஐந்து வினாக்களுக்கு விடை தர வேண்டும். ஒவ்வொரு விடையும் ஒரு பத்திக்கு மிகாமல் அமைதல் வேண்டும். விடை ஒன்றிற்கு 3 மதிப்பெண்கள். பிரிவு – 3இல் இருந்து மூன்று வினாக்களுக்குக் கட்டுரை வடிவில் விடை தர வேண்டும். ஒவ்வொரு விடையும் 3 பக்கங்களுக்கு மிகாமல் அமைதல் வேண்டும். விடை ஒன்றிற்கு 15 மதிப்பெண்கள்.)**

**பிரிவு – 1**

**ஒரு சொல் / தொடரில் விடை தருக.** **(15x1=15)**

1. சங்க இலக்கியங்களில் வீரயுகப் பாடல்கள் இடம்பெற்ற நூல்கள் யாவை?
2. மாதரியின் மகளின் பெயர் என்ன?
3. திருத்தக்கதேவர் அரி, அயன், அரன் மூவரும் எக்கடவுள் என்று கூறுகின்றார்?
4. சேக்கிழார் கூறும் 'அநபாயன்' என்பவன் யார்?
5. கம்பர் தம் காப்பியத்திற்கு வைத்த பெயர் என்ன?
6. இலக்கிய நயத்தில் சுவை கூட்டுவது எது?
7. இறைவன் முதன்முதலில் படைத்த இன்பவனம் எது?
8. நாயகம் என்பதன் பொருள் என்ன?
9. கண்ணகி புரட்சிக் காப்பியத்தின் ஆசிரியர் யார்?
10. தானவர் மரபிலே வந்தவன் யார்?

11. தமிழில் தோன்றிய முதல் காப்பியம் எது?
12. இராவணனின் மகன் பெயர் என்ன?
13. ஏனியட்டில் முக்கியக் குறியீடாகத் திகழ்வது எது?
14. இயேசுவைக் குற்றம் காணவும் பழி தூற்றவும் கருதியவர்கள் யார்?
15. இங்கிலாந்தின் புகழ்பெற்ற ஆங்கிலக் கவிஞர் யார்?

## பிரிவு – 2

**எவையேனும் ஐந்து வினாக்களுக்கு ஒரு பத்தி அளவில் விடை தருக.**

**(5x3=15)**

1. காப்பியம் என்ற சொல்லுக்கு விளக்கம் தருக.
2. மணிமேகலை அமுதசுரபி பெற்றது எவ்வாறு?
3. ஆசீவக சமயச் சிந்தனையாக நீலகேசி கூறுவன யாவை?
4. பெரிய புராணம் – சிறு குறிப்பு வரைக.
5. சாத்தானின் இயல்புகளாகக் கூறப்படும் செய்திகள் யாவை?
6. சீறாப்புராணம் – சிறு குறிப்பு வரைக.
7. யூசுப் சுலைகா ஆசிரியர் பற்றிக் குறிப்பு எழுதுக.
8. கவிஞர் முடியரசன் பாரதிதாசன் மீது கொண்ட பற்றினைக் கூறுக.

## பிரிவு – 3

**மூன்று பக்கக் கட்டுரை வடிவில் விடை தருக. (3x15=45)**

1. (அ) தமிழில் காப்பிய வகைகள் எத்தனை? விளக்கி வரைக.

(அல்லது)

(ஆ) சிலப்பதிகாரம் புகார்க் காண்டத்தில் இடம்பெறும் நிகழ்ச்சிகளைத் தொகுத்து எழுதுக.

2. (அ) சிந்தாமணியில் காணப்படும் சமூகச் சிந்தனை பற்றிய செய்திகளைத் தொகுத்து எழுதுக.

(அல்லது)

(ஆ) கவிச்சக்கரவர்த்தி கம்பர் பற்றி ஒரு கட்டுரை வரைக.

3. (அ) தேம்பாவணிக் காப்பியத்தின் கதைச் சுருக்கத்தை எழுதுக.

(அல்லது)

(ஆ) இராவணக் காப்பியத்தில் இராவணனின் தனித்தன்மைகள் விவரிக்க.